# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

<u>ஆணை நாள் **06.09.2019** (முற்பகல்)</u>

**<u>விசாரணை நடைபெறும் இடம்,</u>**
**<u>ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. சு. முத்துராஜ், பி.ஏ.பி.எல்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்கள். SA 4283 & 4866 & 2079 & 4098 /D/2019</u>**

திரு. S. ஜோதிராமலிங்கம், — மேல்முறையீட்டாளர்

/எதிர்

**பொதுத் தகவல் அலுவலர்**/
செயல் அலுவலர், (பொ)
ஓலகடம் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இன்று (06.09.2019) முற்பகல் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. S. ஜோதிராமலிங்கம், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர், திரு.கே. பழனியப்பன், ஓலகடம் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.02.2019, 13.11.2018, 25.09.2017 மற்றும் 24.11.2018 ஆகிய வெவ்வேறு தேதிகளில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 6 (1)ன் கீழ் ஓலகடம் பேரூராட்சி அலுவலகத்திற்கு தாக்கல் செய்து தனது 13.11.2018 மற்றும் 19.01.2019 ஆகிய தேதிகளில் கொடுக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னென்ன என்பது குறித்தும் ஓலகடம், காந்தி வீதி, வார்டு 14 புல எண்.596/11 ரீ.ச. எண்.97/2 இல் புதிய வீடு கட்ட வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது தொடர்பான விவரங்கள் அளிக்க கோரியும் தனது தகவல் அறியும் உரிமை சட்ட மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

3. மனுவை பெற்றுக் கொண்ட பொதுத் தகவல் அலுவலர் வெவ்வேறு தினங்களில் மனுதாரருக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளனர். அதில் திருப்தியடையாத மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005, சட்டப்பிரிவு 19 (1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை வெவ்வேறு தினங்களில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து உரிய தகவல் பெறப்படவில்லை என தெரிவித்து 06.05.2019, 27.05.2019, 07.03.2019, மற்றும் 02.05.2019 ஆகிய தேதிகளிட்ட தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, பிரிவு 19 (3)ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்து தான் கோரியுள்ள தகவல்களை பெற்றுத்தருமாறு குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் இந்த நான்கு வழக்குகளும் ஒரு சேர இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு. S. ஜோதிராமலிங்கம், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்படுள்ளது. ஆணையம் இதனை பதிவு செய்கிறது. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் தகவல் பெறும் உரிமை சட்ட மனுவில் ஒலகடம் காந்தி வீதி வார்டு14, புல எண்.596/11. ரீ.ச.எண்.97/2ல் புதிய வீடு கட்ட வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது தொடர்பான விவரங்கள் அளிக்ககோரி பெறப்பட்ட மனுவிற்கு மேற்சொன்ன இடத்தில் திரு. ரா. வேணுகோபால், த/பெ. ராமலிங்கம் என்பவர் புதிய சிமெண்ட் கான்கிரீட் வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி கோரி 16.02.2017 ஆம் தேதியில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் மேற்படி இடத்தை 20.02.2017ஆம் தேதியில் தல ஆய்வு செய்து விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கட்டிட உரிமம் எண்.52/2016-17 நாள் 23.02.2017 -ல் வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட உரிமையாளர் திரு. வேணுகோபால் என்பவர் தனது வீடு தொடர்பான ஆவணங்களை நீதிமன்றம் தவிர வேறு நபர்களுக்கு வழங்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார் அதன் அடிப்படையில் ஆவணங்களின் நகல்கள் வழங்க இயலவில்லை என தெரிவித்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் நேரில் ஆஜராகாதமையால் அவரின் கூற்றை அறிய இயலவில்லை.

5. மனுதாரரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்ததில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது :

- **இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில் மனுதாரர் மூன்றாம் தரப்பினரைக் குறித்த தகவல்களைக் கோரியுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட மூன்றாம் நபரின் ஆட்சேபணை அல்லது ஒப்புதலை தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 11-ன் கீழ் பெற்றபின் பொதுத் தகவல் அலுவலர் இத்தகவல்களை வழங்குவதோ அல்லது மறுப்பது குறித்தோ உரிய முடிவுகளை எடுத்து, தகவல் பெறும் உரிமை சட்டப் பிரிவுகளுக்கு உட்பட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்த விவரத்தை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க**

**பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.**

ஒம்/- சு. முத்துராஜ்,
மாநிலத் தகவல் ஆணையர்.

ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்கள். SA 4283 & 4866 & 2079 & 4098 /D/2019</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
**பொதுத் தகவல் அலுவலர்**/
செயல் அலுவலர், (பொ)
ஒலகடம் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்

**<u>மனுதாரர்</u>**
திரு. எஸ். ஜோதிராமலிங்கம்
எண். 5, காந்தி வீதி,
ஒலகடம்,
பவானி வட்டம்
ஈரோடு மாவட்டம்-638 314.
*DS / PC*